செ.வெ.எண்.681 நாள்: 12.08.2010

**<u>இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் பணி முன்னேற்றம் தொடர்பாக எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களுடன் கூட்டம்</u>**

**<u>மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆய்வு</u>**

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய எண்ணெய் நிறுவனங்களின் எரிவாயு பிரிவு உயர் அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் பணி முன்னேற்றம் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (12.08.2010) காலை 10.30 மணிக்கு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில், கலைஞர் அரசு பதவியேற்ற பிறகு, தமிழகத்தில் இதுவரை சுமார் 21 இலட்சம் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 இலட்சம் இணைப்புகளையும் வழங்கிட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு எரிவாயு இணைப்புகள் வழங்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இருப்பினும், சில மாவட்டங்களில் ரெகுலேட்டர்கள் விநியோகம் சீராக இல்லாத நிலை இருக்கிறது. எனவே, துறை உயர் அலுவலர்கள், எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு தேவையான அளவு ரெகுலேட்டர்களை பெற தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும், எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் தேவையான ரெகுலேட்டர்களையும், எரிவாயு இணைப்புகளையும் டிசம்பர் மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தினார்கள்.

ஊரகப் பகுதிகளில் எண்ணெய் நிறுவன முகவர்கள் இல்லாததால் எரிவாயு சிலிண்டர்களை பெறுவதில் பொது மக்களுக்கு சிரமமாக உள்ளது. எனவே, எரிவாயு

முகவர்கள் இல்லாத  ஊரகப் பகுதிகளில் உடனடியாக எரிவாயு முகவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், எரிவாயு முகவர்கள் நுகர்வேர்களை மாற்று எரிவாயு சிலிண்டர் கோரி பதிவு செய்ய  21 நாட்கள் காத்திருக்க வேண்டும் என்றும், புதிய எரிவாயு இணைப்பு  பெறுவதற்கு, அந்தந்த எரிவாயு  முகவர்களிடம் தான் அடுப்பு வாங்க வேண்டும் என்று  கட்டாயப்படுத்தக் கூடாது என்றும்,      எரிவாயு நுகர்வோர்கள் தெரிவிக்கும் புகார்களை உடனுக்குடன் தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அனைத்து எண்ணெய் நிறுவன உயர் அலுவலர்களும், ரெகுலேட்டர்களையும், இணைப்புகளையும் டிசம்பர் மாத்திற்குள் வழங்கி விடுவதாகவும், இதர கோரிக்கைகளையும் நிறைவேற்றி விடுவதாகவும் உறுதி அளித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. ஆர். சிவகுமார், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, முனைவர்   திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. ஏ. ரமண குமார், பிராந்திய மேலாளர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்,  சென்னை,   திரு. ஜி. சீனிவாசன், பிராந்திய மேலாளர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர், திரு. எஸ். சஞ்சீவி ராமன், துணை பொது மேலாளர் (எரிவாயு), இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்,  திரு. கே. திருவாசகம், பிளான்ட் மேலாளர், இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:

இயக்குநர்,  செய்தி, மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.